(8) சுற்றுலாப் பயணிகளுக்காக 36 தங்கும் விடுதிகள், 8 இளைஞர் விடுதிகள், 8 படகு, 2 நடமாடும் உணவு விடுதிகள், 3 பூங்காக்கள் மற்றும் தொலைநோக்குக் கோபுரம், பெட்ரோல் பங்க் ஆகியவற்றை நிறுவியுள்ளது.

**12.20. சுற்றுலாத் திட்டங்களுக்கு அரசு சலுகைகள்:**

**a) கடன் அளித்தல்:** அவ்வப்போது சுற்றுலாத் திட்டங்களுக்கு நிதியுதவி நிறுவனங்கள் மூலம் கடன் அளிக்கிறது. இதற்கு ரிசர்வ் வங்கி நிர்ணயிக்கும் வட்டி விகிதம் வசூலிக்கப்படுகிறது.

**b) மூலதன மானியங்கள்:** புனித சுற்றுலாத் திட்டங்களுக்கு, மொத்த முதலீட்டில், நிலத்தின் விலை நீங்கலாக 10 சதவீதம் முதலீட்டு மானியங்களை அளிக்கிறது. அதிகப்பட்ச தொகையாக ரூபாய் 10 லட்சம் வரை கொடுக்கிறது.

**c) மின் ஆக்கி எந்திரமானியங்கள்:** புதிய சுற்றுலாத் திட்டங்களுக்கு மின் ஆக்கி எந்திரத்தின் விலையில் 15 சதவீதம் மானியம் அளிக்கிறது. இச்சலுகையின் கீழ்க் கிடைக்கக் கூடிய அதிக அளவு மானியத் தொகை ரூபாய் 5 லட்சம் ஆகும்.

**d) ஆடம்பர வசதி வரித் தள்ளுபடி:** சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைகளுக்கு உட்படாத பகுதிகளுக்கு 50 சதவீதம் ஆடம்பர வரித் தள்ளுபடி வழங்கப்படுகிறது. இத்தகைய தங்கும் விடுதிகளில் ஒன்று, இரண்டு அல்லது மூன்று நட்சத்திர அந்தஸ்து பெற்றவையாகவும், இவ்விடுதி கட்டுவதற்கான மொத்தச் செலவு ரூ.100 லட்சத்திற்குள்ளும் இருக்க வேண்டும்.

**12.21. கழகத்தின் நிதி நிலை:** தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1994 - 95 மற்றும் 1995 - 96-இல் அதிக நஷ்டத்தை அடைந்திருந்தது. 1996 - 97-ஆம் ஆண்டில் ரூபாய் 43.05 லட்சம் நிகர லாபத்தை ஈட்டியுள்ளது. 1997 - 98-ஆம் ஆண்டின் வருவாய் ரூ.24.33 கோடியாகும். இது சென்ற ஆண்டைவிட 18 சதவீதம் கூடுதலாகும்.

**12.22. தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்கள்**

தமிழ்நாட்டில் பல்வேறு வகையான சுற்றுலாத் தலங்கள் உள்ளன. இயற்கை எழில் கொஞ்சும் இடங்கள், வரலாற்றுத் தொன்மை வாய்ந்த இடங்கள், கலாச்சார பண்பாட்டு நினைவுச் சின்னங்கள், உன்னதக் கட்டிடக் கலையின் கம்பீரத் தோற்றங்கள், கோடை கால மலைவாழ் இடங்கள், வழிப்பாட்டுத் தலங்கள் என்று வகை வகையான சுற்றுலா மையங்கள் எத்தனை எத்தனையோ உள்ளன. அவற்றில் குற்றால அருவி, மாமல்லபுரம் குகைக் கோயில் சிற்பங்கள், சித்தன்னவாசல், தஞ்சைப் பெரிய கோயில், கும்பகோண நகர்க் கோயில்கள், மதுரை மீனாட்சி அம்மன் கோயில், உதகமண்டலம் (ஊட்டி), கொடைக்கானல், ஏர்க்காடு போன்ற கோடைகால மலைவாழ் இடங்கள், இராமேஸ்வரம், திருநள்ளாறு, திருவையாறு போன்ற புனித இடங்கள் ஆகிய இவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

இவை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணிகளைக் கவரும் வண்ணம் இருப்பினும் இவற்றின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், சுற்றுலாப் பயணிகளுக்குத் தரமான சேவையை வழங்கவும் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கான அறிவிப்பைச் சுற்றுலாத் துறை அமைச்சர் வெளியிட்டுள்ளார்.

### 12.23. வடநாட்டிற்கு இணையான திட்டம்

**சக்கரத்தில் பாரம்பரியம் (Heritage on wheels):** ராஜஸ்தான் மாநிலத்தில் 'சக்கரத்தில் அரண்மனை' (Palace on Wheels) என்ற புதிய சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் டெல்லியிலிருந்து ஜெய்ப்பூர் வரை சிறப்பு அதி நவீன வசதி கொண்ட ரயில் இயக்கப்படுகிறது. இது வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்கிறது.

அதற்கு இணையாகத் தமிழ்நாட்டில் 'சக்கரத்தில் பாரம்பரியம்' என்ற திட்டத்தின் கீழ் அகல ரயில்பாதை மூலம் தென் மாநிலங்களில் உள்ள முக்கிய தலங்கள் இணைக்கப்படும். இதனால் தென் மாநிலங்கள் முழுவதும் சுற்றுலாப் பயணம் மேற்கொள்ள முடியும். இத்திட்டத்தைத் தமிழ்நாடு முன்மாதிரியாக இருந்து செயல்படுத்தும் என்று சுற்றுலா அமைச்சர் தெரிவித்துள்ளார். இத் திட்டத்திற்கான செலவின் தோராய மதிப்பீடு ரூ.15 கோடி ஆகும்.

**அருங்காட்சியகம்:** மாமல்லபுரம் கடற்கரைக் கோயிலில் திறந்த வெளியில் உள்ள அருங்காட்சியகத்தில் கூடுதல் சிலைகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இங்குத் தமிழ் வரலாற்று, பண்பாட்டு சிறப்பைப் பறைசாற்றும் வண்ணம் வீரபாண்டியக் கட்டபொம்மன், ஆண்டாள் ஆகியோரது சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. இவை தவிர பழமபெரும் தமிழகத்துத் தேர்தல் முறையான சோழர் காலத்துக் குடவோலை முறையை விளக்கும் சிற்பங்கள், சோழர் கால நாணயம், பாரி வேந்தனின் வள்ளல் குணத்தைச் சித்தரிக்கும் சிலை, மற்றும் இசைத் தூண் மண்டபம் இவற்றைப் படிப்படியாக அமைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

**சுற்றுலாப் பெருந் திட்டம்:** தமிழ்நாட்டின் முக்கிய சுற்றுலா மையங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான திட்டத்தைத் தயாரிக்க மேல்மட்ட தேர்வுக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இது தமிழ்நாட்டுச் சுற்றுலா மேம்பாட்டுக்கான பரிந்துரைகளை எடுத்தியம்பும். இதற்கான செலவுத் திட்டம் சுமார் 20 லட்சம் ரூபாய். இதனை மாநில அரசு ஏற்றுக் கொள்ளும்.

மாமல்லபுரம், ராமேஸ்வரம், நாகூர், கன்னியாகுமரி, வேளாங்கண்ணி போன்ற முக்கிய சுற்றுலாத் தலங்களில் சாலைகள் மேம்படுத்தப்பட்டு மற்றும் கழிவறைகள், ஒளிவிளக்கு வசதிகள் செய்யப்படும்.

**சுற்றுலா அலுவலகம்:** சென்னை திருவல்லிக்கேணியில் அரசால் ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் சுற்றுலா மேம்பாட்டிற்கான அலுவலகங்கள் கட்டப்பட இருக்கின்றன.

மாமல்லபுரம், உதகமண்டலம், கொடைக்கானல், மதுரை, ராமேஸ்வரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் உள்ள தங்கும் விடுதிகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், கூடுதல் வசதிகளைச் செய்து தரவும் அரசு தீர்மானித்துள்ளது.

**சிறப்புச் சுற்றுலாப் பகுதி:** கிழக்குக் கடற்கரைச் சாலையை ஒட்டி, சென்னை முதல் பாண்டிச்சேரி வரையில் உள்ள கடற்கரைப் பகுதியைச் சிறப்புச் சுற்றுலாப் பகுதி என அறிவிக்கப்பட்ட நிலையில் சுமார் 300 கோடி ரூபாய் மதிப்புள்ள புதிய தனியார் சுற்றுலாத் திட்டங்கள் அரசு அனுமதிக்காகக் காத்து நிற்கின்றன. இது குறித்து சுற்றுலாத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

**கால்ப் விளையாட்டு (Golf):** உலகெங்கும் பல நாடுகளில், குறிப்பாக தென் கிழக்காசிய நாடுகளில், சிறப்புற்று விளங்கும் 'கால்ப்' விளையாட்டில் பங்கேற்க ஜப்பான், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், ஆஸ்திரேலியா போன்ற பல நாடுகளிலிருந்து நிறைய சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். இந்த வசதியை மேம்படுத்துவதற்குச் சென்னை நந்தனத்தில் உள்ள கால்ப் விளையாட்டு குழுமத்திற்கும், உதகமண்டலம் கால்ப் குழுவிற்கும் நிதி உதவியாக தலா ரூ.15 லட்சம் மற்றும் 16 லட்சம் மத்திய அரசிடம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**பக்தர்களுக்கு வசதி:** காஞ்சிபுரத்தில் காஞ்சி சங்கரமட அறக்கட்டளை மூலம் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்குத் தங்கும் வசதி செய்து கொடுக்க 30 லட்சம் ரூபாய் சுற்றுலாத் துறையால் ஒதுக்கப்பட்டுள்ளது. இதேபோல் மேல்மருவத்தூரில் அருள்மிகு ஆதிபராசக்தி அறக்கட்டளை மூலம் பொதுக் கழிப்பிடம் மற்றும் ஓய்விட வசதிக்கென 12.75 லட்சம் ரூபாய் சுற்றுலாத் துறையால் ஒதுக்கப்பட்டுப் பணி நடைபெற்று வருகிறது.

**விளம்பரம்:** தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா மையங்களின் சிறப்பை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அறிந்து கொள்ளும் பொருட்டு, விளம்பரத்திற்காக அரசு ரூபாய் 1 கோடி அளித்துள்ளது. இது வெளிநாட்டுச் செய்தித் தாள்கள் வாயிலான விளம்பரம், வழிகாட்டுப் பயிற்சி, வெளிநாட்டில் விளம்பர முகாம்கள், விளம்பர ஒலி நாடா தயாரிப்பு போன்றவற்றிற்குத் தரம் வாரியாகச் செலவிடப்படுகிறது.

**மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:** தமிழநாட்டில் நீலகிரி மாவட்டத்திற்கு மட்டும் சுற்றுலா வளர்ச்சிக்காக மைய அரசின் சிறப்புத் திட்டமான மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிதி வழங்கப்படுகிறது.

### ஒலி ஒளிக்காட்சி

டில்லி செங்கோட்டை கொல்கத்தாவில் விக்டோரியா ஹால் போன்ற கட்டடங்களின் வரலாறுகள் ஒலி, ஒளி மூலம் விளக்கப்படுகின்றன. இது சுற்றுலாப் பயணிகளின் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. அந்த வகையில் தஞ்சை பெரிய கோயில், ராஜராஜ சோழன் பற்றிய வரலாறு ஒலி, ஒளி காட்சிகளாகப் பயணிகளுக்கு வெளிப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 1996-இல் ஏற்கெனவே திட்டமிடப்பட்டு 1 கோடியே 40 லட்சம் ரூபாய் செலவுத் தொகையாக கணக்கிடப்பட்டுள்ளது. தற்போது இத்திட்டத்தின் மேல் நடவடிக்கை எடுக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

### தங்கும் விடுதி

அறுபடை வீடுகளில் ஒன்றான சுவாமிமலைக்கு வரும் வெளி ஊர் மற்றும் வெளிநாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ரூபாய் 19 லட்சம் செலவில் புதிய தங்கும் விடுதிகள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### கடல் மீட்பு மையம்

வேளாங்கன்னி கிறிஸ்தவர்களின் புனித தலமாக விளங்குகிற போதிலும் சமயச் சார்பற்று அங்கு வரும் ஆன்மிக மற்றும் விடுமுறை சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. பொதுவாக, இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் கடலில் நீராடுவது வழக்கம். பெரும்பாலும் இங்கு வரும் பக்தர்கள் குடும்பத்துடன் வருவதால் குழந்தைகள் மற்றும் பெண்கள் கடலில் குளிக்கும்போது ஆபத்து ஏற்பட்டால் அவர்களைக் காப்பாற்ற கடல் மீட்பு மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது பயணிகளிடம் நல்ல வரவேற்பைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

### கல்லணை மேம்பாட்டுத் திட்டம்

ஆண்டுகள் பலவற்றைக் கடந்து நிற்கும் கல்லணை கரிகாற்சோழனால் கட்டப்பட்டது என்ற வரலாறு யாவருக்கும் தெரிந்திருக்கும். வரலாற்று ஆர்வம் கொண்டோரும், பொழுது போக்கு அம்சங்களில் ஆர்வம் உடையோரும் இங்கு விடுமுறை நாள்களில் வந்து போகின்றனர். இந்தச் சுற்றுலாத் தலத்தை மேம்படுத்த பல திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. கழிவறைகள் கட்டவும், அங்குள்ள பூங்காக்களைப் பராமரிக்கவும், சுற்றுலா வசதிகளை மேம்படுத்தவும் தற்போது ரூபாய் 20 லட்சம் ஒதுக்கப்பட்டு, சுற்றுலா துறையால் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.